IntSym 2019
9th International Symposium

# புராதன சுற்றுலாத் தளங்களின் வீழ்ச்சி: குருநாகல் பண்டுவஸ்நுவர தளத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**M.S.F. Fasna[262], M.N.H. Mohammed[263] & A. Rushana[264]**

Correspondence: m.s.f.fasna@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் மிக வேகமாக முன்னேறி வரும் துறைகளுள் சுற்றுலாத் துறையும் ஒன்றாகும். சுற்றுலாத் துறையின் பங்களிப்பானது ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியில் இன்றியமையாததாக காணப்படுகின்றது. இன்று மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறுபட்ட சவால்களில் சுற்றுலாத்துறையிலுள்ள வீழ்ச்சிகள் முக்கியமானவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி மாவட்டத்தில் குருநாகல் பண்டுவஸ்நுவர புராதன தளத்தில் வேலை செய்யும் 50 பேர் தெரிவு செய்யப்பட்டு அரைக்கட்டமைக்கப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் ஒன்றின் மூலம் இவ்வாய்வுக்குரிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. இவ்வாய்வானது முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை மையமாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் இலங்கையின் வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர பிரதேசமானது ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை சுற்றுலாப் பிரதேசமாகக் காணப்பட்டாலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவாகவே காணப்படுகின்றது. இதற்குப் பிரதான காரணமாக சுற்றுலாப் பயணிகளுக்கு போதிய விடுதி வசதிகள் இன்மை, அதனுள் போதிய பாதுகாப்பு இன்மை, உட்கட்டமைப்பு வசதிகளுள் உணவகங்கள் மற்றும் மலசலகூடங்கள், பொருத்தமான பாதைகள் இன்மை போன்ற காரணங்களால் பண்வஸ்நுவர புராதன தளங்களில் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன. மேலும் குருநாகல் மாவட்டத்தின் பிரசித்தி பெற்றுக்காணப்படும் முக்கிய தளங்களுடன் ஒப்பிடுகையில் பண்டுவஸ்நுவர புராதன தளமானது, வீழ்ச்சியடைந்து சென்றதை இவ் ஆய்வின் மூலம் கண்டறியக் கிடைத்தது. மேலும் இவ்வாய்வானது பண்டுவஸ்நுவர பிரதேச சுற்றுலாத் துறையிலுள்ள வீழ்ச்சிகளைக் கண்டறிவதே இதன் நோக்கமாகக் காணப்படுகின்றது. எனவே, எதிர்காலத்திலுதம் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பதனால் அதனை கருத்திற் கொண்டு இத்தகைய சுற்றுலாத்துறை குறைபாடுகளை தடுப்பதற்கான தீர்வுகள் முன்மொழியப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்**: சுற்றுலாத் துறை, புராதன தளம், குருநாகல் மாவட்டம்

## அறிமுகம்

சுற்றுலாத் துறையானது இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமன்றி வளர்முக நாடுகளிலும் காணப்படும் பொருளாதார வளர்ச்சிக்கான உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டு இருக்கும் துறையாகும். பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு செயற்படுகின்ற இலங்கை அரசாங்கம் அதற்காக தெரிவு செய்துள்ள துறைகளில் சுற்றுலாத் துறையும் முக்கிய இடத்தை வகித்து வருகின்றது. இலங்கையின் சுற்றுலாத் துறை போருக்குப் பின்னரான காலங்களில் மீளவும் புத்துயிர் பெற்று, படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. அதனடிப்படையில் 2011ம் ஆண்டு ஏறத்தாழ 2.1 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (Annual Statistical Report 2011). அதிலும் குறிப்பாக ஏனைய தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையின் சுற்றுலாத் துறையின் வெவ்வேறு பரிணாமங்களான கடற்கரைகள், அழகிய மழைக்காடுகள், காடும் காடு சார்ந்த உயிர்ப்பல்வகைமைகள், கலாச்சார மற்றும் வரலாற்று நினைவிடங்கள் என்பவற்றை உல்லாசப்பயணிகள் பார்வையிடக் கூடியதாகக் காணப்படுகின்றது.

[262] Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
[263] Faculty of Islamic Studies and Arabic Language, South Sri Eastern University of Sri Lanka.
[264] Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.

குருநாகல் மாவட்டம் பண்டுவஸ்நுவர வரலாற்று நினைவிடங்களில் ஒன்றாக முக்கியத்துவம் அடைவதற்கான காரணத்தை கண்டறிய இதன் வரலாற்றுப் பின்னனியை நோக்குவது அவசியமாகும். 12ம் நூற்றாண்டில் பொலன்னறுவை இராச்சியத்தின் மன்னரான பராக்கிரமபாகு இலங்கை வரலாற்றில் ஒரு கொடி ஒன்றின் கீழ் மூன்று தீவுகளை ஒன்றினைக்கும் கடைசி மன்னர்களில் ஒருவராவார். அவருடைய ஆட்சிக்கு ஒட்டுமொத்த செழிப்பிற்கும் கிங் பண்டுவஸ்தேவன் ஒத்துழைப்பு வழங்கினான். கிங் பண்டுவஸ்தேவனும் பத்தகச்சனாவும் பத்து மகன்களுக்குப் பிறகு ஒரு மகளை ஈற்றெடுத்தனர். அவளின் பெயர் உன்மாதச்சித்ராவாகும். சித்ராவின் வருங்கால மகன் இறையான்மைக்காக அவனது மாமாக்கள் அனைவரையும் கொன்றுவிடுவான் என்ற அரச ஜோதிடர்கள் அறிவித்தார்கள். இளவரசர் அபியா அரசராக பணியாற்றிய பின் தனது சகோதரியை பண்டுவஸ்நுவர விகாரையில் சிறைபிடித்தார். ஆனாலும் தீககாமினி மற்றும் உன்மாதச்சித்ராவிற்கும் இடையிலான அன்பை நிறுத்த முடியவில்லை. அவர்கள் இருவருக்கும் பண்டுகாபயன் என்ற மகன் பிறந்தான். பண்டுகாபயனின் பிறப்பானது பண்டுவஸ்நுவரவை வரலாற்று முக்கியத்துவமடையச் செய்வதோடு மேலும் கி.மு.5ம் நூற்றாண்டின் மன்னர் பாண்டுவஸ்தேவின் ஆட்சியும் இங்கு நடைபெற்றிருந்தமையும் பண்டுவஸ்நுவர வரலாற்று சிறப்புமிக்க ஒரு தளமாக அமையப்பெற காரணமாகின்றது எனலாம். அத்தோடு வரலாற்று நினைவிடங்களில் ஒன்றான குருநாகல் பண்டுவஸ்நுவர புராதன தளமானது சுற்றுலா தளமாக இருந்த போதிலும் பெருமளவிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை முறையாக கையாளப் போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க திட்டங்களை வகுத்துள்ளதா என்பது விவாதத்துக்குரியதாகவே உள்ளது.

**ஆய்வுப் பிரதேசம்**




**Figure 31**

இலங்கை மன்னர் ஆட்சிக்காலத்தில் செல்வாக்கிற்கு உட்பட்ட அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி ஆகிய புராதன தலைநகரங்கள் வரிசையில் குருநாகல் மாவட்டம் பிரதான மூன்று இராசதானிகளைக் கொண்ட முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புராதன நகரமாக மிளிர்கின்றது.

அந்தவகையில் பண்டுவஸ்நுவர, குருநாகல் பிரதேசத்தில் ஒரு பண்டைய நகரமாக விளங்கிய இது சிறிது காலத்திற்கு இலங்கையின் தலைநகராக இயங்கியதுடன் 12ம் நூற்றாண்டில் இந்நகரம் தற்காலிக தலைநகராக திகழ்ந்த பெருமையை உடையது. அந்தவகையில வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டத்தில பண்டுவஸ்நுவர தேர்தல் தொகுதியில் வாரியப்பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுமார் 19km (12மைல்) தொலைவிலுள்ள வாரியப்பொல-சிலாபம் பிரதான வீதியில் கொட்டாம்பிட்டி எனும் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தின் வருடாந்த வெப்பநிலையாக $26^{0}$c இணையும் வருடாந்த **மழைவீழ்ச்சி 264mm ஐ பெற்றுக்கொள்கின்றது. பல்லின மக்கள் ஒன்றிணைந்து வாழக்கூடிய இப்பிரதேசமானது 63,742 சனத்தொகையினைக் கொண்டது.** (பண்டுவஸ்நுவர பிரதேச செயலகப் பிரிவின் மூலவளத்திரட்டு)

எனவே உலகளாவிய மற்றும் நாடளாவிய ரீதியில் சுற்றுலாத்துறைக்கு முக்கியம் பெற்றுக் காணப்படுகின்ற முக்கிய புராதன தளங்களுள் ஒன்றாக இந்த பண்டுவஸ்நுவர பிரதேசம் அமைந்து காணப்படுவது சிறப்புக்குரியதாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

புராதன தளங்களில் ஒன்றான குருநாகல் பண்டுவஸ்நுவர, சுற்றுலாத்துறையில் பின்னடைவைக் கண்டுள்ளது. எனவே தான் இப்பிரதேச சுற்றுலாப் பயணிகளின் வருகையும் மிக அரிதாகவே காணப்படுகின்றது. இதற்குப் பிரதான காரணமாக மக்களிடையே பிரசித்தி பெற்ற ஒரு சுற்றலாத் துறைக்குரிய தளமாக அடையாளப்படுத்தப்படவில்லை. மேலும் சுற்றுலாப் பயணிகளுக்கு போதிய விடுதி வசதிகள் இன்மை, மேலும் அதனுள் போதிய பாதுகாப்பு வசதியின்மை, உட்கட்டமைப்பு வசதிகளுள் உணவகங்கள் மற்றும் மலசலகூடங்கள், பொருத்தமான பாதைகள் இன்மை போன்றன காரணங்களாகக் காணப்படுகின்றன. மேலும் பண்டுவஸ்நுவர அண்டிய பிரதேசங்களைச் சுற்றி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் எந்தவொரு சுற்றுலாத் துறைக்குரிய இடங்களும் காணப்படவில்லை. அத்தோடு இப்பிரதேசத்தைச் சுற்றிய ஏனைய இடங்களும் விருத்தியுறா நிலையில் காணப்படுவதே இத்தளமானது சுற்றுலாத் துறைக்குரிய முக்கிய இடம் எனும் பட்டியலிலிருந்து விலகி சென்றுள்ளது. எனவே இத்தகைய பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இப்பிரதேசம் சுற்றுலாத் துறையில் எதிர்கொண்டுள்ள வீழ்ச்சிகளுக்கான காரணங்களை மையமாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வு பின்வரும் பிரதான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

1. பண்டுவஸ்நுவர பிரதேச சுற்றுலாத்துறையிலுள்ள வீழ்ச்சிகளைக் கண்டறிதல்.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது பண்பு ரீதியானதும் அளவு ரீதியானதுமான ஆய்வாக அமைவதால் பண்டுவஸ்நுவர புராதன தளத்தில் சுற்றுலாத் துறையிலுள்ள வீழ்ச்சிகளைக் கண்டறிய தேவையான தரவுகளும் தகவல்களும் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலகங்களில் இருந்து பெறப்பட்டன. இம்மாவட்டத்தில் பண்டுவஸ்நுவர புராதன தளத்தில் சுற்றுலாத் துறையிலுள்ள வீழ்ச்சிகளைக் 05 (2013 - 2017) வருடங்களை மையமாக வைத்து ஆய்வு செய்யபப்பட்டுள்ளது.

முதலாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக கள ஆய்வு, நேர்காணல், நேரடி அவதானிப்பு என்பன பயன்படுத்தப்பட்டு தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மேற்படி பண்டுவஸ்நுவர புராதன தளத்தில் சுற்றுலாத் துறையிலுள்ள வீழ்ச்சிகளைக் கண்டறியும் நோக்கில் அரைக்கட்டமைக்கப்பட்ட நேர்காணல் முறை இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு இவ்வாய்வு பண்புசார் தகவல்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறே M.W.விஜேரத்ன என்பவருடனும் A.M.W.தர்மசிரி, A.M.N.B.அலகூன் போன்ற மூன்று நபர்களுடன் மற்றும் அங்குள்ள சுமார் 50 ஊழியர்கள் நேர்காணலும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டன. நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல் அனைத்திலும் MS Excel எனும் மென்பொருள் பயன்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறுபேறுகள் பின்னால் கலந்துரையாடப்படுகின்றன.

**பெறுபேறுகளும் முடிவுரையும்**

இலங்கையின் பொருளாதார விருத்தியில் சுற்றுலாத் துறையானது பாரிய பங்களிப்பினை செய்வதாக அமைந்திருப்பினும் புராதன தளங்களில் ஒன்றான பண்டுவஸ்நுவர சுற்றுலாத் தளமானது சுற்றுலாத் துறை வளர்ச்சியில் படிப்படியாக குறைந்து கொண்டே சென்றுள்ளதை இவ்வாய்வின் மூலம் கண்டறியக்கிடைத்தது.





**Figure 5**

*(மூலம்: பண்டுவஸ்நுவர நூதனசாலை 2018)*

**மேலும் சுற்றுலாப் பயணிகள் பண்டுவஸ்நுவர சுற்றுலாத் தளத்திற்கு வருகை தருவதுடன் அருகில் காணப்படும் பண்டுவஸ்நுவர நூதனசாலைக்கும் வருகை தருகின்றனர். சுற்றுலாத் தளத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததனால் நூதனசாலைக்குச் செல்லும் மக்கள் தொகையும் குறைந்து கொண்டு செல்வதனை பின்வரும் பார் விளக்கப்படம் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.**





**Figure 3**

*(மூலம்: பண்டுவஸ்நுவர நூதனசாலை 2018)*

மேலும் குருநாகல் மாவட்டத்தில் பிரசித்து பெற்றுக் காணப்படும் முக்கிய தளங்களான குருநாகல், யாப்பகுவ, தம்பதெனிய ஆகியவற்றோடு ஒப்பிடுகையில் பண்டுவஸ்நுவர பிரதான தளமானது வீழ்ச்சியடைந்து சென்றுள்ளதை இவ் ஆய்வின் மூலம் கண்டறியக் கூடியாத உள்ளது.





**Figure 4**

*(மூலம்: பண்டுவஸ்நுவர நூதனசாலை 2018)*

மேலும் பண்டுவஸ்நுவர பிரதேசத்தில் சுற்றுலாத் துறையிலுள்ள பின்னடைவிற்கான காரணங்களைப் பற்றி அப்பிரதேச மக்கள் மற்றும் ஊழியர்களிடம் (ARC Figure 6 HAEOLOGICAL RESEARCH ASSISTANT- M.M.WIJERATHNE) கலந்துரையாடல், கல ஆய்வு மூலம் பெற்றுக் கொண்ட தகவலின் அடிப்படையில் போதிய விடுதிகள் இன்மை மிக பிரதான காரணமாக சுட்டிக்காட்டப்பட்டது.

இதனடிப்படையில் ஆய்வுக்குழு அப்பிரதேசத்திற்கு சென்று பார்வையிட்ட போது சுற்றுலாப் பயணிகளுக்குரிய அடிப்படைத் தேவைகளான பாதுகாப்பு, உட்கட்டமைப்பு வசதிகள், உணவகங்கள் மற்றும் மலசலகூடங்கள், பொருத்தமான பாதைகள் இன்மை போன்றன நேர்காணல் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களாகும்.

இந்தவகையில் ஆய்வுப் பிரதேச சுற்றுலாத் துறையை கவனத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு பின்வருமான சாத்தியமான விதந்துரைகளை முன்வைக்க முனைகிறது. மக்கள் கவரும் விதத்தில் பண்டுவஸ்நுவர புராதன தளத்தை அமைத்தல். மேலும் நுழைவாயிலை ஒழுங்கான முறையில் சீரமைத்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு போதிய விடுதி வசதிகளை அமைத்தல். மேலும் அதனுள் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான பாதுகாப்பு வசதிகளைக் கருத்திற் கொண்டு பாதுகாப்புப் பிரிவை நியமித்தல்.

சுற்றுலாத் துறை சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளான விடுதிகள் மற்றும் உணவகங்களிலும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் கவனம் செலுத்த வேண்டியது ARCHAEOLOGICAL RESEARCH DEPARTMENT ன் கடமையாகும். சுற்றுலாத் தளத்தை சுத்தம் செய்வதற்குரிய ஊழியர்களை நியமனம் செய்தல். மேலும் பண்டுவஸ்நுவர அண்டிய பிரதேசங்களைச் சுற்றி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் சுற்றுலாத் துறைக்குரிய இடங்களைப் பார்வையிட இலகுவான முறையில் அமைத்தல் என்பவற்றினூடாக இப் புராதன சுற்றுலாத் தளம் வீழ்ச்சி அடைவதனைத் தடுக்கலாம்.

இக் குறைபாட்டை மேலிடத்தில் முன்வைத்தும் எவ்வித தீர்வுமின்றி காணப்படுவதாக அப்பிரதேசவாதிகள் மற்றும் அங்கு வேலைபார்க்கும் உத்தியோகத்தர்கள் மூலம் அறியக்கிடைத்தது. பொருளாதார விருத்தியில் பாரிய பங்களிப்பாற்றும் சுற்றுலாத் துறையானது மேலும் வளர்ச்சியடைய சுற்றுலாத் திணைக்களம் பாரிய முயற்சிகள் மற்றும் திட்டங்களை கையாள வேண்டுமென இவ் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது.

எனவே முடிவாக பார்க்கும் போது, குருநாகல் மாவட்ட பண்டுவஸ்நுவர சுற்றுலாத் துறையில் இது போன்ற குறைபாடுகள் நடைபெறுவதால் நாட்டின் பொருளாதாரம் பாதிப்படைகின்றது. அதற்கு மேற்கூறப்பட்ட தீர்வுகள் அப்பிரச்சினைகளுக்கான முதலும் இறுதியுமான தீர்வாக கருதுவதும் அது ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி சிந்திக்காமையும் இதற்கு அடிப்படையாக அமைந்துள்ளன என்பதனை இவ்வாய்வின் முடிவகள் வெளிப்படுத்துகின்றன. எனவே எதிர்காலத்திலும் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பதனால் அதனை கருத்திற் கொண்டு இத்தகைய சுற்றுலாத்துறை குறைபாடுகளை தடுப்பதற்கான தீர்வுகள் முன்மொழியப்பட்டுள்ளன.

**References**

1. Bahatia ,A.K., (1983), "*Tourism Development*", Sterling Publishers (p) Ltd, New Delhi.
2. Richards, (2007), "*Cultural Tourism Global and Local Perspectives*", The Hawarth Hospitality press, Binghamton, New York.
3. Senerath Disanayke, (2009), "*Asirimath Panduwasnuwara*",
4. ஈஸ்வரன்,ச, (2006), "*சுற்றுலாவியல்*", பாவை பப்ளிகேசன், இராயப்பேட்டை - சென்னை-600014.
5. தல்கமணி.ம, (2000), "*சுற்றுலாவியல் ஓர் அறிமுகம்*", முத்துப்பதிப்பகம் - புதுக்கோட்டை, 62201.
6. அருண்.ஆ, "*சுற்றுலாத்துறை வளர்ச்சியில் இலங்கை எதிர்நோக்கி நிற்கின்ற சவால்கள்*", 27, புரட்டாதி, வீரகேசரி வெளியீடு, இலங்கை.
7. Climate data, [Accessed]: (17.09.2018, 06.06), https://en.climate-data.org.
8. Weather in Ketuwalawatta, [Accessed]: (17.09.2018, 06.06), www.meteoblue.com.(16.09.2018,